1993 பிப்ரவரி 12]

75—

எல்லா மாவட்ட வேலை வாய்ப்பு அலுவலகங்களிலும் கணிப்பொறி வைக்கும் திட்டம்.

*11390—திரு. கே. முனிவெங்கடப்பன் :

மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) எல்லா மாவட்ட வேலை வாய்ப்பு அலுவலகங்களிலும் கணிப்பொறி (Computor) வைக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

மாண்புமிகு திரு. சே. ரகுபதி, தொழிலாளர் நல அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) மைய அரசின் நிதி உதவியுடன் தற்போது சென்னையில் அடையாறு, அண்ணா நகர், கோயம்புத்தூர், திருச்சிராப்பள்ளி ஆகிய 4 மாவட்ட வேலை வாய்ப்பு அலுவலகப் பணிகள் கணிப்பொறி (Computor) மூலம் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. இத்திட்டத்தின் மூலம் நடப்பு நிதியாண்டில் மேலும் 6 வேலை வாய்ப்பு அலுவலகங்களை கணிப்பொறியின் மூலம் செயல்படுத்த அரசு ஆணைகள் வழங்கியுள்ளது. இத்திட்டம் படிப்படியாக அனைத்து வேலை வாய்ப்பு அலுவலகங்களிலும் செயல்படுத்தப்படும்.

முற்பகல் 10-15.

திரு. கே. முனிவெங்கடப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு எந்தத் துறையிலும் மிக நவீன விஞ்ஞான நுட்பத்தைப் புகுத்தி இந்தியாவிலேயே வேறு எந்த மாநிலத்திலும் இல்லாத வகையில் செய்து வரும் இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்களின் ஆட்சியிலே சிறந்த, நவீன விஞ்ஞானங்களைப் புகுத்துகின்ற ஒரு சாட்சியாக ஏழரை மாதங்களில் நேரு ஸ்டேடியத்தை 'ஏஷியன் குயின்' என்று சொல்லக்கூடிய அந்த நேரு விளையாட்டு அரங்கத்தைக் கட்டி முடித்திருக்கும் புரட்சித் தலைவியின் ஆட்சியிலே இந்த ஆண்டிற்குள் எல்லா மாவட்டத் தலைநகரங்களிலும் கணிப்பொறி நிறுவப்படுமா என அறிய விரும்புகிறேன்.

[1993 பிப்ரவரி 12

மாண்புமிகு திரு. சே. ரகுபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நடப்பு நிதியாண்டில் 6 அலுவலகங்களில் கணிப்பொறி ஆக்குவதற்காக அரசு ஆணைகள் வழங்கப்பட்டு இருக்கின்றன. படிப்படியாக மற்ற அனைத்து மாவட்டங்களுக்கும் வரும் ஆண்டுகளில் நிதிநிலையை அனுசரித்து செயல்படுத்தப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. கே. முனவெங்கடப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எதையும் சிறந்த முறையில், சிறப்பான முறையில், நேர்மையான முறையில் செய்து வரும் புரட்சித் தலைவியின் ஆட்சியிலே இந்த ஆண்டு தர்மபுரி மாவட்டத் தலைநகரில் இந்த கணிப்பொறி நிறுவப்படுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சே. ரகுபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஆண்டில் தர்மபுரி மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகத்தை கணிப்பொறி மயமாக்க எந்தச் செயல்பாடும் அரசின் குறிப்பில் இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 76, டாக்டர் ஜெய்சன் ஜேக்கப், மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர்.

76—

திருவண்ணாமலை-சம்புவராயர் மாவட்டத்திலுள்ள அரசு விவசாய கிடங்குகள்.

*11094—டாக்டர் ஜெய்சன் ஜேக்கப் :

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவண்ணாமலை சம்புவராயர் மாவட்டம், ஆரணி தொகுதி வேலப்பாடி, கண்ணமங்கலம், எஸ்.வி. நகரம், ஆதனூர் ஆகிய பகுதிகளில் உள்ள அரசு விவசாய கிடங்குகளிலிருந்து போலி பர்மிட்கள் மூலம் உரங்கள் எடுத்துச் செல்லப்பட்டு உர வியாபாரிகளுக்கு அதிக விலைக்கு விற்கப்படுவதை அரசு அறியுமா?

(ஆ) அம் எனில், அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன், வேளாண்மைத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,